**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.எல்.,**

**சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**2022–ஆம் வருடம் டிசம்பர் மாதம் 1 ஆம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.530/2022**

**in**

**Original Suit No.1253/2022**

**(CNR No.TNDG19-004221-2022)**

**----**

K. ராஜன் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

N. தங்கவேல் ...... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 27.04.2022 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.1253/2022–இல் இ.ம.எண்.530/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் கடந்த **14.11.2022–ஆம்** தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.விஜயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** மனு அட்டவணை சொத்துக்களை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய உத்தரவிட கோரி இந்த மனு உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 38, விதி 5 –இன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–**

மனுதாரர், எதிர்மனுதாரர் மீது கடனுறுதிச்சீட்டின் பேரிலான கடன் தொகை ரூ.6,00,000/– மற்றும் பின்வட்டி கோரி அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும்,

மனுதாரர், எதிர்மனுதாரரிடம் கடனுறுதிச்சீட்டின் பேரிலான பணத்தொகையை செலுத்த கோரி நேரிலும் ஆட்கள் மூலமும் பலமுறை கேட்டதில் எதிர்மனுதாரர் கடன் தொகையை செலுத்தி வைக்கவில்லை, எதிர்மனுதாரர்/பிரதிவாதி தன்னிடம் மட்டும் அல்லாமல் இன்னும் பல நபர்களிடமும் கடன் பெற்றுக்கொண்டு பல பிராமிசரி நோட்டுக்கள் எழுதிக்கொடுத்துள்ளார், அவர்களும் கடன் தொகையை திருப்பி செலுத்தும்படி நிர்பந்தம் செய்வதால், எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்கிரையம் செய்துவிட்டு நிரந்தரமாக வெளியூர் சென்றுவிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார் எனவும், இந்த விபரம் தனக்கு மூன்றாம் நபர் மூலம் தெரிய வந்ததாகவும், எதிர்மனுதாரருக்கு மனுச்சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் ஏதும் இல்லை எனவும், எதிர்மனுதாரர் மனுச்சொத்தை கிரையம் செய்துவிட்டால் மனுதாரரால் தாவா கடனை வசூல் செய்ய இயலாமல் போய்விடும் எனவும், மனுச்சொத்தினை தீர்ப்புக்கு முன் உடன் பற்றுகை செய்தால்தான் வழக்கு கடனை வசூல் செய்ய இயலும் எனவும், எனவே எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுவில் கண்ட சொத்தை தீர்ப்பிற்கு முன்பு உடன் பற்றுகை செய்து உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனு உரையின் சுருக்கம்:**

இந்த மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைநிற்கத்க்கதல்ல எனவும், இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், இந்த எதிர்மனுதாரர் மனுதாரரிடம் மட்டும் அல்லாமல் வேறு எந்த நபர்களிடம் கடன் பெறவில்லை என்றும், எதிர்மனுதாரர் வேறு ஒரு சொத்து கிரையம் பெறுவதற்காக மனுச்சொத்துக்களை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே தாராபுரத்தில் உள்ள ஐசிஐசிஐ வங்கிக்கு பதிவு செய்து கொடுத்து கடன் பெற்று சரியான வழியில் திருப்பி செலுத்தி வருகிறார் எனவும், எதிர்மனுதாரர் பலரிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், மனுதாரர்தான் பல நபர்களிடம் கடன் பெற்று திருப்பி செலுத்தாமல் ஏமாற்றி வருகிறார் என்றும், மனுதாரர் சுந்தரம்

பைனான்ஸ் மூலமாக 2 வாகனங்களுக்கு கடன் பெற்றிருந்தார் என்றும், அதற்கு இந்த எதிர்மனுதாரர்தான் கேரண்டி கையெழுத்து செய்திருந்தார் என்றும், மனுதாரர் ஸ்ரீராம் பைனாஸ்சில் கடன் பெறுவதற்கு இந்த எதிர்மனுதாரர்தான் ஜாமீன் கையெழுத்து செய்திருந்தார் எனவும், மணிவேலிடம் கடன் பெற்றதை திரும்பி செலுத்தாததால் 2018 ஆம் ஆண்டு பழனி சார்பு நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.299/2018, இடைமனு எண்.582/2018 நம்பரில் வழக்கு தாக்கல் செய்து மனுதாரரின் இடத்தை உடன் ஜப்தி செய்துள்ளார் என்றும், எதிர்மனுதாரருக்கும் அவரது பக்கத்து தோட்டத்தை சேர்ந்த நாச்சிமுத்துக்கவுண்டன் மகன் நாட்டுத்துரை என்பவருக்கும், நாட்டுத்துரையும் நெருங்கிய நண்பர்கள், மேற்படி பாதை சம்பந்தமான பிரச்சனையை பெரிதுபடுத்தி இந்த எதிர்மனுதாரர் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நாட்டுத்துரை என்பவர் பாதை சம்பந்தமாக ஒரு போலி ஆவணத்தை உருவாக்கி உள்ளார் என்றும், மேற்படி நாட்டுத்துரையின் தூண்டுதலின்பேரில் மனுதாரர் இந்த வழக்கு மற்றும் இடைமனுவையும் தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனு அட்டவணை சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்து உத்தரவிடலாமா? என்பதே ஆகும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. பிரச்சனைக்குரிய தீர்வு :–**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் கடனுறுதிச்சீட்டின்பேரிலான பணத்தொகையை மீட்டளிக்க கோரி அசல் வழக்கை எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ளார். கடந்த 30.06.2019 ஆம் தேதியன்று எதிர்மனுதாரர், மனுதாரரிடம் கடன் தொகை ரூ.6,00,000/– பெற்றுக்கொண்டு அதற்கு

ஆண்டிற்கு 12% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதே தேதியன்று கடனுறுதிச்சீட்டை நிறைவேற்றினார் என மனுதாரர் தமது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளார். மேலும் அதற்கு ஆதரவாக 30.06.2019 ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலை தாக்கல் செய்துள்ளார். மேற்படி கடனுறுதிச்சீட்டை பரிசீலனை செய்கையில் மனுதாரரின் வாக்குமூலத்தை உறுதி செய்கிறது. எனவே எதிர்மனுதாரர் கடன் தொகை ரூ.6,00,000/–யை மனுதாரரிடம் பெற்றுள்ளார் என இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

**7.** மனு அட்டவணை சொத்து எதிர்மனுதாரருக்கு சொந்தமானது, அதை எதிர்மனுதாரர் பராதீனம் செய்ய முயன்றார் என மனுதாரர் தமது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளார். அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.1–கணினிப்பட்டா நகல் மற்றும் ம.சா.ஆ.2–மனுச்சொத்துக்களுக்கான வில்லங்க சான்றிதழ் ஆகியவற்றை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் 09.01.2018 ஆம் தேதி ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், தாராபுரம் கிளையில் கடன் பெற்றுக்கொண்டு உரிமை வைப்பு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களை பரிசீலிக்கையில் மனு அட்டவணை சொத்தை எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதையும், எதிர்மனுதாரர் மனு அட்டவணை சொத்தை பராதீனம் செய்ய முயன்றுள்ளார் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே எதிர்மனுதாரர் அசல்வழக்கில் பிறப்பிக்கப்படலாகும் தீர்ப்பாணையின் நிறைவேற்றத்தை தடங்கல் அல்லது தாமதப்படுத்தும் நோக்கத்தோடு மனு அட்டவணை சொத்துக்களை பராதீனம் செய்ய கருதியுள்ளார் என்பது இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே மனு அட்டவணை சொத்துக்களை தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்வது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து இவ்வாறு இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**8.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனு அட்டவணை சொத்தை தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது. பற்றுகை படி செலுத்த மூன்று

நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது. அழைக்க நாள் 10.01.2023. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2022.12.01 18:39:31 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

**9. மனுதாரர்தரப்பு சாட்சியம் -இல்லை**

**10. மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் -**

| வ.எண். | நாள் | ஆவண விபரம் |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.04.2022 | கணினிப்பட்டா எண்.2520-இன் நகல் |
| ம.சா.ஆ.2 | 12.04.2022 | 01.01.2000 முதல் 11.04.2022 தேதி வரையிலான வில்லங்கச்சான்று |

**11. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் :-இல்லை**

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2022.12.01 18:39:36 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

I.A.No.530/2022 in
O.S.1253/2022
Sub Court, Oddanchatram.
01.12.2022
Order (Fair/Draft)